**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**
**TIRUVANNAMALAI.**

**OS No.132/2023**

**24.02.2026 வா.சா.1 ஆறுமுகம் த/பெ. தொப்பளான்**

**சத்திய பிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் ஒரு பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் ஆவேன். நான் 2013 ல் பதிவு செய்தேன். நான் எந்த துறையில் ஒப்பந்ததாராக பதிவு செய்தேன் என்றால் பொதுப்பணித்துறையில் பதிவு செய்தேன். அதுவே அறநிலைத்துறைக்கும் போதுமானது என்று சொன்னார்கள். நான் ஒப்பந்ததாராக பதிவு செய்த ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. நான் ஒரு பதிவு பெற்ற ஒப்பந்ததார் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் பிரதிவாதி கோயிலில் ஒப்பந்தப்பணியை செய்துள்ளேனா என்றால் 2009ல் செய்துள்ளேன். அதற்கான ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் எந்தெந்த பணிகள் செய்ய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் திருக்கோயில் அம்மணி அம்மன் கோபுரம் பக்கத்தில் உள்ள தங்கும் விடுதி 4,5 பகுதியில் பராமரிப்பு பணி, திருக்கோயில் உள்பகுதியில் நெல்குடோன் பழுதி பார்த்தல், உண்ணாமலை அம்மன் கோயில் வெளியில் கால்வாய் பழுதுபார்க்கும் பணி, உண்ணாமலை அம்மன் தங்கும் விடுதி பராமரிப்பு பணி செய்துள்ளேன்.

மேற்படி பணிகளை செய்து முடிக்க நிபந்தனையுடம் பணி ஆணை பெற்றேன் என்றால் சரிதான். நான் பணி உத்தரவில் உள்ள நிபந்தனைகளை படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன். ஒப்பந்த நிபந்தனைகளில் அந்த பணிக்கு உண்டான தொகையை கோயில் நிர்வாகம் கொடுப்பதில் தாமதம் ஏற்பட்டால் அதற்கு வட்டி செலுத்த வேண்டும் என்று நிபந்தனை எதுவும் இல்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் 11.12.2013 முதல் 11.01.2023 வரையிலான காலத்திற்கு ரூ. 6,00,000/- வட்டியாக கோரியுள்ளேன் என்றால் சரிதான். நான்கு பணிகளுக்கும் ஆன மொத்த ஒப்பந்தத்தொகை ரூ. 11,50,000/- என்றால் சரிதான். அதில் நான் எவ்வளவு பெற்றேன் என்றால் ரூ. 5,18,000/- ற்கு ஒரு காசோலை எனக்கு வழங்கப்பட்டது. ரூ. 5,18,000/- நான் செய்து முடித்த பணிக்கு உண்டான மொத்த தொகை என்று சொன்னால் சரியல்ல. அது வெளிப்படையாக செய்த வேலைகளுக்கு மட்டும்தான்

அளவெடுக்கப்பட்டது. வெளிப்படையாக கொடுத்ததைதவிர உள்படையாக செய்ததை அளவிட முடியாது என்று சொன்னால் நான் உள் அளவையும் அளந்து மதிப்பீடு செய்ய வேண்டும் என்றுகோயில் நிர்வாகத்திடம் கேட்டேன். அவ்வாறு நான் பிரதிவாதி கோயிலிடம் எழுதிக்கொடுத்தேன் என்பதை காண்பிக்க ஆதாரம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா எனறால் கொடுத்துள்ளேன்.

நான் அனுப்பிய சட்ட அறிவிப்பிலும் அவ்வாறு ஒரு கடிதம் கொடுத்ததாக சொல்லவில்லை மற்றும் முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்று கேட்டால் அதற்கு பிறகு சொல்லியுள்ளேன். நான் ரூ.20,11,046/- ற்காக தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் ஒப்பந்தப்படி பணிகளை முழுமையாக செய்யாமல் பாதியில் விட்டுவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. முழு பணியையும் முடித்து விட்டேன். பணி முடித்ததால்தான் அதன்பின்னர் மற்ற பராமரிப்பு பணிகள் வழங்கப்பட்டது. அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. நான் பணி செய்து முடித்த பின்பு நான்கு பணிகளை ஆய்வு செய்ய விழுப்புரத்தில் இருந்து பொறியாளர் தலைமையில் ஒரு குழு வந்து ஆய்வு செய்தார்கள் என்றால் சரிதான். அவர்கள் ஆய்வு செய்தபோது நானும் அங்கு இருந்தேன். அந்த குழுவின் பரிந்துரையின் பேரில்தான் நான் செய்தபணிகளுக்கான மதிப்பு ரூ. 5,18,000/- என்று நிர்ணயம் செய்யப்பட்டு அந்த தொகை எனக்கு செலுத்தப்பட்டது என்று சொன்னால் அந்த அறிக்கையின் நகல் எனக்கு வழங்கப்படவில்லை.

அந்த குழுவின் அறிக்கை இந்து அறநிலைத்துறை ஆணையரின் உத்தரவுப்டி சென்னை உயர் நிதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்டு அதன் நகல் எனக்கு வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. அதனை நான் ஒப்புக்கொண்தன்பேரில்தான் காசோலை வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் 4-5 காலமாக பணியை முடிக்காமல் இருந்ததால்தான் இந்த பிரச்சனை ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. ஆய்வுசெய்த குழுவினர் நிர்ணயம் செய்த தொகையை பெற்றுக்கொண்ட பிறகுதான் 2023 ல் இவ்வழக்கத்தை தாக்கல் செய்தேன் என்று சொன்னால் சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவை பெற்ற பிறகு 2023 ல் இவ்வழக்கை தாக்கல் செய்தேன். நான் தாக்கல் செய்த மனுவின் நகலோ

அல்லது உத்தரவின் நகலோ இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

**வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன்பேரில் குறுக்கு விசாரணை** – இத்துடன் நிறுத்தப்படுகிறது .

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.